சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No. 161/2024

பெயர் : நர்மதா

தகப்பனார் பெயர் :

கணவர் பெயர் :மதன்குமார்

வயது :

கிராமம் :மதுரை,K. புதுார்

வட்டம் :மதுரை

தொழில் :வீட்டுக்குடித்தனம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

13.11.2025

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் பெயரில் பிரதிவாதி 9 லட்சம் ரூபாய்க்கு 12.06.2025 தேதியிட்ட காசோலை கொடுத்துள்ளார் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.1. மேற்படி காசோலை 13.06.2025 அன்று பணமாக்கப்படாமல் திருப்பப்பட்டதற்கான வங்கி மேற்குறிப்பு வா.சா.ஆ.2. வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது வா.சா.ஆ-3. மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4. முதல் முறையாக கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பெயர்தவறுதலாகிவிட்டபடியால் மீண்டும் 24.06.2025 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தோம். அந்த அறிவிப்பு வா.சா.ஆ.5. மேற்படி அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.6. 9 லட்சம் ரூபாய் கடன் வாங்கும்போது பிரதிவாதி அவர் பெயரில்

உள்ள கிரைய பத்திரத்தை ஈடாக கொடுத்திருந்தார் அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.7. வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.8.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.13 22:18:03 +0530

Sub Judge

Melur